# சங்க காலத் தமிழர் வணிகம்

**பேராசிரியர் Dr சங்கிரிகா சுப்ரமண்யன்**
**ஆஸ்திரேலியா**

20

**முன்னுரை**

வணிகம், வணிகர் ,பொருள் , பண்டம் ,நாணயம் ,விற்பனை ,கொள்வனவு இவற்றுடன் தொடர்புடைய ஏற்றுமதி ,இறக்குமதி ,தொழிற்கூடம், அங்காடி ,துறைமுகம், கப்பல் ,வரி இந்த சொற்கள் எதுவுமே சங்க கால தமிழருக்கு புதிதானவை அல்ல.

''பதிஎழு அறியாப் பழங்குடி' என்று தொல்காப்பியம் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வாழவில்லை கூறினாலும் கூட கடல் வணிகம் நிகழ்ந்திருப்பதை சங்க இலக்கியங்களும், உலகெங்கும் நிற்கும் தமிழர் கால் பதித்த தடங்களும் உறுதி செய்கின்றன.

சங்க காலத்தில் இரு விதமான வணிகங்கள் இருந்திருப்பதைக் காணலாம். சங்க கால வணிகர் கடல் சார்ந்த கடல் வணிகத்தை கலங்களில் சென்றும் , மற்றும் கூட்டம் கூட்டமாக சென்று தரை சார்ந்த வணிகத்தை நடத்திய சான்றுகளை காணக் கூடியதாக இருக்கின்றது.

தரை வழி வணிகம், உள்ளூரிலும் வெளியூர்களிலும், மூவேந்தர் நிலப்பரப்பிலும், அவர்களின் எல்லைக்கு அப்பாற்பட்டும் நிகழ்ந்திருக்கின்றன. கடல் வழி வணிகம் தமிழக கரையோரங்கள் தொடங்கி தமிழகத்தை தாண்டி இலங்கை, மலேசியா, பர்மா போன்ற நாடுகளோடு இருந்த தமிழர்களின் வணிக உறவுகளையும், மேற்கே அரபு நாடு எகிப்து, ரோம், யவனம், தெற்காசிய நாடுகளில் தமிழர்களின் வணிகம் பரந்திருந்ததையும் சான்றுகள் உறுதி செய்கின்றன.

குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் ஆகிய தமிழ் மக்களின் நிலங்களில் கிடைக்கக்கூடிய வளம் மிக்க வணிகப் பொருட்கள் தமிழரின் வணிக மூலமாக அமைந்திருந்தது என்பதைக் காணக் கூடியதாக உள்ளது.

இது போல, மக்களின் தேவைகளும் அந்த நிலம் சார்ந்த தேவைகளாகவும், அதன் அடிப்படையிலேயே அவர்களுடைய கொள்முதல் வர்த்தக பண்பாடு அந்த நிலங்களிலே வெளிப்பட்டு நின்றுள்ளன.

தமிழர் சிறப்பாகப் போற்றிய அறுவகைத் தொழில்களான, உழவு வணிகம், நெசவு, தச்சு, மட்பாண்டம் செய்தல், உலோகத் தொழில் என்பவற்றுள் வணிகம் உழவுக்கு அடுத்து இடத்தை பெற்றிருப்பதைக் காணலாம்.

**வணிகர்**

வணிகம் செய்வோர் வணிகர், வாணிகர் என்றும், விலை கூறி விற்பதால் 'விலைஞர்' என்றும், தன்னிடம் உள்ள பொருள் இன்னது என இயம்பி விற்பதால் 'பகர்வர்' என்று

ஐங்குறுநூற்றிலும், ‘விலையாட்டி’ என்று சிலம்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளனர். பொது நிலையில் வெளியூர்களிலிருந்து வணிகம் செய்ய வருவோரைச் ‘சாத்தனார்’ என அழைத்தனர். வணிகத்திற்குரிய பொருட்களைப் பொதுவாக பண்டம், பண்ணியம் எனக் குறிப்பிட்டதை,

"கொடுமேழி நசையுழவர்
நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்" (பட்டினப்பாலை) மற்றும்

”குறும்பல் குழுவிற் குன்றுகண் டன்ன
பருந்திருந் துகக்கும் பன்மா ணல்லிற்
பல்வேறு பண்டமொ டூண்மலிந்து கவினி
மலையவு நிலத்தவு நீரவும் பிறவும்
பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர்நரும்
மழையமுக் கறாஅப் பிழையா விளையுட்
பழையன் மோகூர் அவையகம் விளங்க
நான்மொழிக் கோசர் தோன்றி யன்ன

தாமேஎந் தோன்றிய நாற்பெருங் குழுவும் ”, (மதுரைக் காஞ்சி ) என்னும் பாடல்களின் வழி அறியலாம்.

**அங்காடி**

கடைகளை அங்காடி என்று,

”ஆடுதுவன்று விழவின் ஆடார்த்தன்றே
மாடம் பிறங்கிய மலிபுகழ்க் கூடல்

நாளங்காடி நனந்தலைக் கம்பலை”
பல்வேறு புள்ளின் இசை எழுந்தற்றே

அல் அங்காடி அழிதரு கம்பலை” என மதுரைக்காஞ்சியும்

சிலப்பதிகாரம்,

‘கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஒதையும்

நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி’

‘நாள்மகிழ் இருக்கை நாளங்காடியில்

பூமலி கானத்துப் புதுமணம் புக்கு' எனவும் சிறப்பிக்கின்றன.

**வர்த்தக அறம்**

பட்டினப்பாலை பாடலின்

"கொள்வதூஉம் மிகை கொளாது
கொடுப்பதூஉம் குறை கொடாது
பல்பண்டம் பகர்ந்து வீசும்
தொல் தொண்டித் துவன்று இருக்கை" என்ற வரிகள்

அறத்துடன் வணிகம் நிகழ்ந்தது என்பதை எடுத்துரைகின்றது.

**உள்நாட்டு வணிகம்**

உள்நாட்டு வணிகம் பெரும்பாலும் பண்டமாற்று முறையில் நடைபெற்றது. வணிகத்தில் பெரும்பாலும் பெண்கள் ஈடுபட்டதற்கான குறிப்புகள் அகநானூற்றில் இடம்பெற்றுள்ளன.

'கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரி விலைமாறு கூறலின்' .

'நெல்லும் உப்பும் நேரே; ஊரீர்!
கொள்ளீ ரோஎனச் சேரிதொறும் நுவலும்
அவ்வாங்கு உந்தி அமைத்தோ ளாய்நின்'

உப்பைக் கொடுத்து, நெல்லை பெற்று வணிகம் இதில் பேசப்படுகின்றது.

**பண்ட மாற்று**

"கானுறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான் தசைசொரிந்த வட்டியும், ஆய்மகள்
தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய,
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகந்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும்
தென்னம் பொருப்பன் நல்நாட்டுள்ளும்" (புறப்பாடல் )வேட்டுவன், நாய் வேட்டையாடிக் கொண்டுவந்த மான் தசையைக் கொடுத்துவிட்டு நெல்லைப் பெற்றுச் செல்கிற காட்சியும்

அவரோ வாரார் முல்லையும் பூத்தன
பறியுடை கையர் மறியினத்தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்

யாடுடை இடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாம் சிறுபசு முகையே (குறுந்தொகை) இடைமகன் பாலைக் கொடுத்து குடிக்கக் கூழை பெறும் காட்சியும்

"முள் எயிற்றுப் பாண்மகள் இங்கெடிறு சொரிந்த
அகன் பெரு வட்டி நிறைய மனையோள்

அரிகால் பெரும் பயறு நிறைக்கும்", (ஐங்குறுநூறு )
பாணர்கள் பிடித்த மீன்களை மருத நிலத்தில் விளைந்த தானியத்திற்கும் மாற்றிய் காட்சியும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**அயல் நாட்டு வணிகம்**

பூம்புகார் ஒரு பெரிய வணிக சந்தையாக விளங்கி, அயல் நாடுகளிலிருந்து பல்வேறு பண்டங்கள் தரை வழியாகவும், கடல் வந்திறங்கி குவிக்கப்பட்டிருந்ததை

"அரும்பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப்பெரும் பண்டம்

கலத்தினும் காலினும் தருவன ரீட்ட..." சிலம்பின் வழி காணலாம்.

பெருமளவு உள்நாட்டு வணிகம் பண்டமாற்று முறையில் தொடர்ந்தாலும், வெளிநாட்டு வணிகங்கள் நாணயங்களை அடிப்படையாகக் கொண்டு நடைபெற்றிருக்கின்றன. மூவேந்தர்களும் தனித்தனியாகத் தம் இலச்சனைகள் பொறித்த நாணயங்களைப் பயன்படுத்தியுள்ளனர். சங்க காலத்தமிழர்கள் அயல்நாட்டினரோடு தொடர்பை

பட்டினப்பாலை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது, அயல்நாட்டுப் பொருட்களைக் கொணர்வதும் தம் நாட்டுப் பொருட்களை ஏற்றுமதி செய்வதும் ஆகிய அன்னியச் செலாவணியில் அன்றையத் தமிழகம் சிறந்திருந்தது.

யவனர் குளிர்மையான மது வகையறாக்களை எடுத்து வந்தனர் என்னும் செய்தியை,

"யவனர் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்

ஒண்டொடி மகளிர் மடுக்க" என்ற பாடலும் ,( புறநானூறு)

யவன வணிகர் பொன், வெள்ளிக் காசுகளைக் கொடுத்துத் தமிழகப் பண்டங்களை வாங்கிச் சென்றனர் என

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்

பொன்னொடு வந்து கறியொடு பெயரும் வளம்கெழு முசிறி' ' (அகப்பாடல்)
எனவும் கூறுகின்றன . இதில் தமிழகத்தின் பண்டைய முசிறி துறைமுகம் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது .

**துறைமுகங்கள்**

கொய் சுவல் புரவி கொடி தேர் செழியன்
முதுநீர் முன்துறை முசிறி முற்றி

களிறுபட எருக்கிய கல்லென் ஞாட்பின் – அகம்

சுள்ளியம் பேரியாற்று வெண் நுரை கலங்க
யவனர் தந்த வினை மாண் நன் கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ
அரும் சமம் கடந்து படிமம் வவ்விய

நெடு நல் யானை அடுபோர் செழியன் – அகம்
முதுநீர் முன்துறை முசிறி முற்றி - அகம்
வளம் கெழு முசிறி ஆர்ப்பு எழ வளைஇ - அகம்
முழங்கு கடல் முழவின் முசிறி அன்ன - புறம்

முகை அவிழ் தார் கோதை முசிறியார் கோமான் – முத்தொள்ளாயிரம்

இது தவிர மேற்குக் கரையோரமான சேரநாட்டுத் துறைமுகங்களாக நயவு, முசிறி, தொண்டி, பொற்காடு என்பவையும் , தெற்கே குமரியும், கிழக்கே கொற்கை, காவிரிப்பூம் பட்டினம், எயிற்பட்டினம், அழகன்குளம், அரிக்கமேடு, மருங்கூர்பட்டணம் மசுலிப் பட்டினம், மரக்காணம் போன்றவையும் , ஈழத்தில் மாந்தை பெருந் துறைமுகமாகத் திகழ்ந்துள்ளது என்பதும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிமு. 7ம்நூற்றாண்டில் தமிழகத்துப் பொருட்கள் சீனாவில் விற்கப்பட்டிருப்தாகவும், சீனப் பொருட்களான சீனப்பட்டும், சீனியும் தமிழகத்திற்கு வந்தன என்று சீனாவுடனான வணிகம் குறித்துப் பல சான்றுகள் கிடைத்துள்ளன. இவற்றுடன் தொடர்புடைய வர்த்தக ஒப்பந்தங்களை தமிழர்கள் கொண்டிருக்கிறார்கள்.
ஆஸ்திரியா நாட்டுத் தலைநகரான வியன்னாவின் அருங்காட்சியகத்தில் ரோமானிய நாட்டு வணிகனுக்கும், தமிழகத்து வணிகனுக்கும் இடையில் ஏற்பட்ட வணிக ஒப்பந்தம் பாப்பிரஸ் தாளில் எழுதப்பட்டதுள்ளது . வணிக ஒப்பந்தங்களில் காலத்தால் மிகப் பழமையான ஒப்பந்தம் இதுவாக்கும் முசிறி துறைமுகத்தில் பொருள் ஏற்றப்பட்டு, மத்தியத் தரைக்கடல் பகுதியில் நைல் நதி முகத்துவாரத்தில் அமைந்துள்ள அலெக்ஸாண்டிரியா நகரைச் சென்று சேருவது சம்பந்தமான ஒப்பந்தம் அது.

இந்த ஒப்பந்தம் கிரேக்க மொழியில் உள்ளதால், அந்த வணிகத்தில் ஈடுபட்ட தமிழ் வணிகனுக்கு, கிரேக்க மொழி தெரிந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. அன்றைய தமிழகத்தில் கிரேக்க, சீன மொழி தெரிந்தவர்கள் இருந்தனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது இவற்றின் காரணமாக பன்மொழி பேசும் நகரமாக நமது நகரங்கள் விளங்கியிருக்கின்றன .

**'சுங்கம்' - வரி**

வெளியிலிருந்து நகருக்குள் வரும் பொருள்களுக்கு வரி வாங்கும் வழக்கம் இருந்துள்ளது. 'உல்கு' என்பது 'வரி'. அதனையே பின்னாளில் 'சுங்கம்' என வழங்கினர். அரசனுடைய

ஆட்களே நடுநிலையிலிருந்து சுங்கம் வாங்குவார்கள்.

மாகாவிரி மணம் கூட்டும்
தூஉ எக்காத் துயில் மடிந்து
வால் இணர் மடல் தாழை
நல்லிறைவன் பொருள் காக்கும்
தொல்லிசைத் தொழில் மாக்கள்
காய் சிதைத்த கதிர்ச் செல்வன்
தேர் பூண்ட மாசு போல

வைல் தோறும் அசைவின்றி' என்ற பட்டினப்பாலையின் பாடல் வரிகள் குறிப்பிடுகின்றன.

முசிறி - அலெக்சாண்ட்ரியா வணிகம் , இலங்கையுடன் வணிகம், தென்கிழக்கு ஆசிய நாடுகளுடனான வணிகம், 'காழகத்தீவு' பர்மாவுடன் வணிகம் என பல நாடுகளுடன் தமிழகம் வர்த்தகத் தொடர்புடன் இருந்ததற்கு சங்க இலக்கியங்களில் சான்றுகள் பல உள்ளன.

**வர்த்தகக் குறியீடுகள்**

பண்டக சாலைகளில் மூட்டைகளில் சேமிக்கப்படும் பொருட்களை அடையாளம் காட்டும் நோக்கில் அளவும் நிறையும் எண்ணும் அடங்கிய குறிகள் பொறிக்கப்பட்டிருந்தன என்பதை

"வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதிக்

கடைமுக வாயில்.' என்ற சிலம்பின் வரிகளால் அறியலாம்.

**முடிவுரை**

தமிழர்களின் சங்க கால வணிகம் தற்கால வணிகத்துக்கு சற்றும் குறையாத அளவு செழித்து ஓங்கி இருந்திருக்கின்றது என்பதற்கு சங்க கால பாடல்களே சான்றாகும்.